**MCOP NO: 238/2025** **DATE: 14.08.2026**

எ.ம.சா : 1

பெயர் : திரு.ஜான்பிரிட்டோ

த/பெ : திரு. மரிய சூசை

வயது : 58

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 14.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணம் எமசாஆ 1 ஐ தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சுமார் 22 வருடங்களாக ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் 28.10.2024 அன்று மாலை 07.45 மணிக்கு தஞ்சாவூரில் பேருந்தை எடுத்து வேலூரிற்கு வர வேண்டும். மறுநாள் காலை மீண்டும் தஞ்சாவூரிற்கு வேலூரிலிருந்து காலை 08.10 மணிக்கு பேருந்தை எடுப்பது வழக்கம். காலை 08.10 மணிக்கு பேருந்தை எடுத்து ஆரணிக்கு 09.20 மணிக்கு செல்ல வேண்டும். 28.10.2024 அன்றே பணியில் இருந்து ஓய்வின்றி வாகனத்தை இயக்கியதால் தான் 29.10.2024 ல் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எனக்கு விபத்து தேதியிலிருந்து மூன்றரை வருடங்கள் சம்பளம் உயர்த்த மாட்டார்கள். விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதால் அரசு போக்குவரத்து கழகம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த விதம் குறித்து எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.